<u>அசல் வழக்கு எண் 87/2009</u>

நாள் 22.08.2019

**Name: மணிவண்ணன் (பி.வா.சா.1/2ம் பிரதிவாதி)**

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

தாவா சொத்துக்கள் எனது தந்தை வழி பாட்டியின் பூர்வீக மற்றும் கிரைய சொத்துக்கள் ஆகும். தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் என் தந்தை வழிபாட்டியின் பூர்வீக சொத்துக்கள். தாவா 4, 5 அயிட்ட சொத்துக்கள் என் பாட்டியின் கிரைய சொத்துக்கள். மேற்படி சொத்துக்களில் எனது அப்பா மற்றும் அவரது சகோதரர்களுக்கு தனிப்பட்ட உரிமை கிடையாது என்றால் சரியல்ல. எனது அப்பா மற்றும் அவரது சகோதரர்கள் பாகம் பிரித்துக்கொண்டதால் மேற்படி சொத்துக்களில் தனிப்பட்ட உரிமை கிட்டியது. அவர்கள் பாகம் பிரித்துக்கொண்டதற்கு ஆவணம் எதுவும் கிடையாது. வாய்மொழியாகதான் பாகம் செய்து கொண்டார்கள். எனது அப்பாவும் அவரது சகோதரர்களும் உறுதிமொழி பத்திரத்தின் அடிப்படையில் பாகம் செய்துகொண்டார்கள். அந்த உறுதிமொழி பத்திரத்தில் விளைநிலங்களை சரிசமமாக பிரித்து பதிவு செய்துகொள்ளவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். உறுதிமொழி பத்திரப்படி விளைநிலங்களை பதிவு செய்வதற்கு நாங்கள் யாரும் முயற்சி செய்யவில்லை. எனது எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள உறுதிமொழி பத்திரத்தில் கண்டபடி பதிவு ஆவணம் ஏற்படாத வரையில் உறுதிமொழி ஆவணம் செல்லாது என்றும், பாகம் பிரித்ததாக கூறமுடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் முழுவதும் எனது பாட்டி லோகம்பாளின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் அவருக்கு மட்டும்தான் தனிப்பட்ட உரிமையுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் எனது பாட்டி லோகாம்பாளுக்கு தாவா சொத்துக்களில் உரிமையில்லை என்று சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. எனது பாட்டி அவரது பேரன்களுக்கு எழுதி வைத்த உயில் பதிவு செய்யப்படாததால் அமுலுக்கு வரவில்லை என்று கூறுகிறேன். உயில் ஆவணத்தில் உள்ள கையெழுத்து லோகாம்பாளுடையது அல்ல என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளது போல் எக்காலத்திலும் எனது தந்தைக்கும், அவரது சகோதரர்களுக்கும் பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. எனது பாட்டி லோகாம்பாள் கடைசி காலம் வரையில் பெரிய மகன்

அரவணைப்பில்தான் இருந்துவந்தார் என்றால் சரியல்ல. தாவா 4, 5 அயிட்ட சொத்துக்களில் எனது பாட்டி தலா 57 சென்டை இளைய மூன்று மகன்களுக்கும் அனுபவத்திற்காக மட்டும் ஒதுக்கி கொடுத்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு ஒதுக்கப்பட்ட 171 சென்ட் போக மீதமுள்ள 4, 5 அயிட்ட சொத்துக்களின் ஒரு பகுதியை எனது பாட்டியும், மூத்த மகனும் ஆதியிலிருந்து ஒதுக்கி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அந்த சொத்துக்களை மூத்த மகன் விற்பனை செய்வதற்கு முயற்சி செய்து வந்ததால் எனது பாட்டி அவரது மூத்த மகனின் வாரிசுகளான இந்த வாதிகளுக்கு உயில் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு உயில் எழுதி வைத்தபிறகு மொத்த சொத்துக்களில் 4ல் 1 பாகத்தைதான் மூத்தமகன் பி.வா.சா.ஆ1, 2ன் படி கிரையம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கிரையம் செல்லாது என்றாலும் சரியல்ல. வாதிகளுக்கும், அவரது தந்தையாருக்கும் சிறு வயதிலிருந்து பிரச்சனை இருந்துவருவதால் வாதிகளின் தந்தை தனியாக சமைத்து சாப்பிட்டு வருகிறார் என்றால் சரியல்ல. வாதிகளின் தந்தை எங்களை தூண்டி தாவா சொத்தின்மீதான வாதிகளின் அனுபவத்தை இடையூறு செய்து வந்தார் என்றால் சரியல்ல. உயிலில் உள்ள கையெழுத்து எனது பாட்டியின் கையெழுத்து அல்ல என்று நிரூபிப்பதற்கு நான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பொறுத்தும், எனது பாட்டி லோகாம்பாளின் தனிப்பட்ட சொத்துக்கள் பொறுத்தும் எந்தவித பாகப்பிரிவினையும் ஆவணப்படி ஏற்படவில்லையென்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எனது பாட்டிக்கு மட்டும்தான் சொந்தம் என்றாலும், எனது பாட்டி லோகாம்பாள் வாதிகளுக்கு எழுதி கொடுத்த உயில் ஆவணத்தின்படி வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. எனவே தாவாபடி தீர்ப்பாககூடியது என்றால் சரியல்ல.

ஒப்பம்/- திரு.எம்.பரமசிவம்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.